*கவனிக்க.- 2015.10.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1940 - 2015 නොවැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2015.11.06

*1940 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1472 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1482 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


*__கவனிக்க.__-இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் 2016 ஆம் நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஆகியன 2015, ஒற்றோபர் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## ஊவா மாகாண அரசாங்க சேவையில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2015

ஊவா மாகாண அரசாங்க சேவையினது இலங்கை தொழில்நுட்ப சேவையில் விவசாய ஆலோசகர் மற்றும் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கு இலங்கையின் எப்பாகத்திலும் வசிக்கின்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.11.30 ஆகும்.

**1. ஆட்சேர்ப்பதற்குரிய பொதுத் தகைமைகள் :-**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கமுள்ளவராகவும் சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது உரிய மாவட்டத்தின் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**2. ஆட்சேர்ப்புக்கான கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :-**

| பதவியும் தரமும் | | க. பொ. த. (சா./தர) பெறுபேறு | க. பொ. த. (உ./தர) பெறுபேறு | தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| விவசாய ஆலோசகர் | தரம் III | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/ கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறும் ஒரு பாடம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் விவசாயம் எனும் விஞ்ஞான பாடங்களில் சேவைக்கு ஏற்புடைய மூன்று பாடங்களில் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | குண்டசாலை, அகுணகொலபெலெஸ்ஸ, பெல்வெஹெர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அனுராதபுரம், கரபிஞ்ச எனும் விவசாயக் கல்லூரிகளில் இருந்து பெற்றுக்கொண்ட இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ்;<br>அல்லது<br>அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்;<br>அல்லது<br>எக்வைனஸ் கல்லூரியின் விவிசாயம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ்;<br>அல்லது<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்;<br>அல்லது<br>மேலுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் பிறிதொரு தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |

| பதவியும் தரமும் | | க. பொ. த. (சா./தர) பெறுபேறு | க. பொ. த. (உ./தர) பெறுபேறு | தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் | தரம் III | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/ கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறும் ஒரு பாடம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | கணிதம், தூய கணிதம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், பௌதிக வியல், இரசாயன வியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், ஆங்கிலம் மற்றும் விவசாயம் எனும் பாடங்களில் சேவைக்கு ஏற்புடைய மூன்று பாடங்களில் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | வெலிசரை, சிப்பிக்குளம், குண்டசாலை எனும் இலங்கை கால்நடை கட்டுப்பாட்டு கல்லூரிகளிலிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ் அல்லது மேலுள்ள டிப்ளோமா சான்றிதழுக்கு சமமானது அல்லது உயர்வானது என இலங்கை தொழில் நுட்ப சேவைகள் சபையினால் தீர்மானிக் கப்படும் பிற தகைமை சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்; <br>அல்லது<br> குண்டசாலை, அகுணகொலபெலெஸ்ஸ, பெல்வெஹெர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அனுராதபுரம், கரபிஞ்ச எனும் விவசாயக் கல்லூரிகளில் இருந்து அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ். |
| | பயிலுநர் தரம் | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/ கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறும் ஒரு பாடம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | கணிதம், தூய கணிதம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், பௌதிக வியல், இரசாயன வியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், ஆங்கிலம் மற்றும் விவசாயம் எனும் பாடங்களில் சேவைக்கு ஏற்புடைய இரண்டு பாடங்களில் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | வெலிசரை, சிப்பிக்குளம், குண்டசாலை எனும் இலங்கை கால்நடை கட்டுப்பாட்டு கல்லூரிகளிலிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ். |

*3.* **ஆட்சேர்க்கும் முறை.-**

(i) நிலவும் பெற்றிடங்களில் 70% வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மூலம் பூர்த்திசெய்யப்படும்;

(ii) ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

(iii) அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட பின்னர், மேலும் வெற்றிடங்கள் நிலவுமாயின் மாத்திரம் ஏனைய மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும். அவ்வாறே பிற மாகாணங்களின் விண்ணப்பதாரிகள் தரம் III பதவிக்கு மாத்திரமே நியமிக்கப்படுவர்;

(iv) இந்த அறிவித்தலில் உள்ள சகல தகைமைகளையும் கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நிலவும் வெற்றிடங்களை விட அதிகமாக உள்ள போது மாத்திரம், திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் அதிகூடிய புள்ளிகளின் முன்னுரிமைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். அவ்வாறில்லையெனின் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது;

(v) **விவசாய ஆலோசகர்**

(அ) விவசாய ஆலோசகர் தரம் III பதவிக்கு மாத்திரம் நியமிக்கப்படுவர்.

(vi) கால்நடை அபிவிருத்தி ஆலோசகர்

(அ) கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர், மேலும் வெற்றிடங்கள் நிலவுமாயின் மாத்திரம் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் திறமை ஒழுங்கின் பிரகாரம் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பயிலுநர் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பயிலுநர் தரத்திற்கு நியமிக்கப்படுமிடத்து அவர்கள் ஒரு வருட காலத்தின் இறுதியில் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைவதற்கு 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அப்பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர்.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

(அ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

(ஆ) ஏற்படைய பதவிகளுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது ஊவா மாகாணத்தில் 6 வருடங்கள் பணியாற்ற வேண்டும்.

**5. சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்).-**

விவசாய ஆலோசகர், கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III

இல. 06/2006 (iv) மற்றும் 7/2008 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் MN - 3 - 2006 A சம்பள குறியீட்டுக்கு அமைய ரூபா 15,005 - 4 × 180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 - ரூபா 27,885 ஆகும்.

கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பயிலுநர் தரம் -

ஆரம்ப வருடம் - 12,920 ரூபா
இரண்டாம் வருடம் - 13,040 ரூபா

**6. விண்ணப்பிக்கும் முறை.-** இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான காகிதத்தின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.11.30 ஆந் திகதி பி. ப. 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கப்பெறுமாறு "செயலாளர்" ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஊவா மாகாண சபை அரசாங்க சேவையினது இலங்கை தொழில்நுட்ப சேவையின் ............................ பதவிக்கு ஆட்சேர்ப்பு 2015" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் தாமதித்து கிடைக்கப்பெறுகின்ற, குறைபாடுடைய, பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகைமைகள் அற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**7. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-** விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 2,30,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**8. பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்.-** பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் கணக்கு இலக்கம் 269-1-001-0-8440479 க்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். நாட்டின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை

தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதோடு அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றிக் கொள்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்க.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2015.11.30 ஆந் திகதி இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள வெற்றிடங்களை விட அதிகமாக முறையான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் மாத்திரம் அவ்விண்ணப்பதாரர்களது சான்றிதழ்களைப் பரீட்சித்துப் பார்க்காமல் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

10. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினாலோ அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் மொத்த பரீட்சைக்கும் ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலே உள்ள 'அ' மற்றும் 'ஆ' ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. **திறந்த போட்டிப் பரீட்சையின் பாட விதானம்**:- இந்த போட்டிப் பரீட்சை 02 வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது.

**விவசாய ஆலோசகர் தரம் III.-**

**உளச்சார்பு**.- (காலம் ஒரு 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) இவ்வினாப் பத்திரம் விண்ணப்பதாரரின் மொழியாற்றல், கணக்குத்திறன், தர்க்க ரீதியில் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு தொகுப்பாக்கம் மற்றும் விரைவில் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும்.

**பொது அறிவு**.- (காலம் ஒரு 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பொருளாதார, அரசியல், சமூக ரீதியான தகவல்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும்.

**கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III மற்றும் பயிலுநர் தரம்**

**உளச்சார்பு**.- (காலம் ஒரு 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) இவ்வினாப் பத்திரம் விண்ணப்பதாரரின் மொழியாற்றல், கணக்குத்திறன், தர்க்க ரீதியில் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு தொகுப்பாக்கம் மற்றும் விரைவில் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும்.

**பொது அறிவு**.- (காலம் ஒரு 1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பொருளாதார, அரசியல், சமூக ரீதியான தகவல்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும்.

13. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் / ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய,
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை,
பதுளை,
2015, ஒற்றோபர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண அரசாங்க சேவையினது இலங்கை தொழில்நுட்ப சேவையின் ................. பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2015**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

A. நீங்கள் வசிக்கும் மாவட்டம், மாகாணத்தைக் குறிப்பிடுக.

B. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுக. (தரம் III, பயிலுநர்)

C. மொழி மூலம் (சிங்களம் - 01/தமிழ் - 02/ஆங்கிலம் - 03)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :
Rev./Mr./Mrs./Miss (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதா.- PERERA A. B. C. (இங்கு Rev./Mr./Mrs./Miss பொருத்தமற்றதை வெட்டி விடவும்)
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.
2.3 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 பால் : பெண் - 1/ஆண் - 0

3.2 பிறந்த திகதி : வருடம் மாதம் திகதி

3.3 2015.11.30 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

4. 4.1 மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள்:-----.
4.2 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.
4.3 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.

5. கல்வித் தகைமைகள் :-
5.1 க.பொ.த. (சாதா. தரம்) பரீட்சை:-----.
1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

5.2 க.பொ.த (உயர் தரம்) பரீட்சை
1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3 பெற்றுக்கொண்டுள்ள டிப்ளோமா/வேறு பாடநெறிகள் பற்றிய விபரம் :----.

| டிப்ளோமா/ பாடநெறி | நிறுவனம் | பாடங்கள் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | வருடம் :---------- |
| | | | மாதம் :---------- |
| | | | திகதி :----------- |

6. வேறு தகைமைகள் :-----.

7. தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம் /இல்லை
ஆம் எனில் விபரத்தை குறிப்பிடுக :-----.

8. பரீட்சை/நிருவாகக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -
8.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய மக்கள் வங்கி கிளை :-----.
8.2 பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :-----.
8.3 செலுத்திய தொகை :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |

**9. விண்ணப்பதாரியின் உறுதியுரை : -**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனாலும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன்.மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ...................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

11. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**: -

திரு./ திருமதி/ செல்வி ......................................................................................... இவ் அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், ........................... ஆந் திகதி முதல் ............................. ஆந் திகதி வரை ........................... பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் 2015.11.30 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ................. வருட காலத்தினுள் (எச்சரிக்கை தவிரந்த) எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படவில்லை என்றும் உரிய தினத்தில் சம்பள ஏற்றங்களை உழைத்துள்ளார் என்றும், திருப்திகரமான சேவைக் காலத்தை உடைய நிரந்தர ஊழியர் என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானவை என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன். (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)
திகதி :-----.

11-180/ 1

---

## ஊவா மாகாண அரசாங்க சேவைக்கு பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

ஊவா மாகாண அரசாங்க சேவைக்கு பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள வேலையற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.11.30 ஆகும்.

1. **ஆட்சேர்ப்புக்கான பொதுத் தகைமைகள்** :-

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) நல்லொழுக்கமுள்ளவராகவும் சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) 2015.05.05 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 3 வருடங்கள் தொடர்ச்சியாக ஊவா மாகாணத்தில் வதிவுள்ளவராக இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது வதிவை உறுதி செய்தல் வேண்டும்.)

(ஈ) 2015.08.31 ஆந் திகதி 35 வயதுக்கும் 45 வயதக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்;

(உ) வேலையற்ற பட்டதாரியாக இருத்தல் வேண்டும். சத்தியக் கடதாசி மூலம் வேலையற்றவர் என்பதை நிரூபித்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள்** :

(அ) மூன்று பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் மொழி/இலக்கியம் மற்றும் எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஆறு 6 பாடங்களில் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

(ஆ) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் சாதாரண பொதுப் பரீட்சை தவிர மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து 2015.05.05 அந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செல்லுபடியாகும் வண்ணம் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**:

1 (ஈ) மற்றும் 2 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி என்பவற்றை விஞ்சியுள்ள பட்டதாரிகளும் விண்ணப்பிக்கமுடியும். எனினும் அவ்வாறான விண்ணப்பதாரிகளில் இருந்து ஏனைய தகைமைகளை பூர்த்திசெய்யும்

விண்ணப்பதாரிகள் மாத்திரம் நிலவும் சேவை அவசியம் மற்றும் பட்டத்தின் பாடம் என்பவற்றை கருத்திற்கொண்டு பயிலுநர்களாகவே சேவையில் அமர்த்த பரிசீலனை செய்யப்படவிருப்பதால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. **தெரிவுசெய்யப்படும் முறை**.- தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு பட்டம் செல்லுபடியாகும் திகதியின் முன்னுரிமை ஒழுங்கிற்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுவர்.

4. **நியமனம் தொடர்பான நிபந்தனைகள்**.- ஒரு வருட காலத்திற்கு பயிலுநர்கள் என்ற அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்.

5. **கொடுப்பனவு**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிலுநர்களாக கடமைப் புரியும் காலப்பகுதிக்கு மாதாந்தம் 10,000 ரூபா கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.-

(1) இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். இல. 1 தொடக்கம் 4 வரையிலான பகுதியை முதல் பக்கத்திலும் 5 தொடக்கம் அதற்கு பின்னர் வரும் பகுதிகளை இரண்டாம், மூன்றாம் பக்கங்களில் அமையுமாறு விண்ணப்பப்படிவங்களை தயார்செய்துகொள்ளல் வேண்டும். தமிழ் மொழி மூலம் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.11.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு "செயலாளர் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஊவா மாகாண சபை அரசாங்க சேவைக்கு பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்புச்செய்தல் - 2015" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(3) உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, தாமதித்து கிடைக்கப்பெறுகின்ற, குறைபாடுடைய, பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகைமைகள் அற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் தபாலில் தொலைந்து போதல் மற்றும் தாமதமாகுதல் பற்றி முன்வைக்கப்படும் எவ்வித முறைப்பாடுகளும் பரிசீலிக்கப்படமாட்டாது. சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திரப்பது பயனளிக்கக்கூடியது.

7. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 2,30,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8. **நிர்வாக செலவுகள்**.- நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.13 க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது முக்கியமானதாகும். ஊவா மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்கள் தவிர்ந்த வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்கள் வழங்குதல்**.- இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் எவரேனுமொரு விண்ணப்பதாரிக்கு இவ் அறிவித்தலில் உள்ள தகைமைகள் இல்லையென நியமனத்திற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவராக்கப்படுவார். விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ பயிலுநராக நியமிக்கப்பட்ட பின்னர் தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

10. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்/ஆட்சேரப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும்/தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
பதுளை,
2015, ஒற்றோபர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண அரசாங்க சேவைக்கு பட்டதாரி பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

நிரந்தர வதிவு மாவட்டம்

(நீங்கள் வசிக்கும் மாவட்டம் "பதுளை" அல்லது "மொனராகலை" என்பதை தெளிவாக குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.3 முழுப்பெயர் :-----.
(சிங்களத்தில் /தமிழில்)

2. 2.1 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
2.2 நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில் /தமிழில்) :-----.
2.3 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 2015.05.05 ஆந் திகதிக்கு ஊவா மாகாணத்தில் நிரந்தமாக வசித்த காலப்பகுதி:

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.2 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.
3.3 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.

4. 4.1 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

4.2 2015.08.31 ஆம் திகதியன்று வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4.3 பால் : பெண் - 1/ஆண் - 0

4.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

5. கல்வித் தகைமைகள் :-
5.1 க.பொ.த. (சா. /தரம்) பரீட்சை:-----.

| | முதலாம் அமர்வு | | | இரண்டாம் அமர்வு | |
|---|---|---|---|---|---|
| | வருடம் :---- சுட்டெண் :---- | | | வருடம் :---- சுட்டெண் :---- | |
| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
| 1 | | | 1 | | |
| 2 | | | 2 | | |
| 3 | | | 3 | | |
| 4 | | | 4 | | |
| 5 | | | 5 | | |
| 6 | | | 6 | | |
| 7 | | | 7 | | |
| 8 | | | 8 | | |

5.2 க.பொ.த (உயர் /தரம்) பரீட்சை
1. ஆண்டு :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3 பெற்றுள்ள பட்டம் பற்றிய விபரம் :----.

| பட்டம் | பெற்றுக்கொண்ட நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

6. வேறு தகைமைகள் :-----.

7. பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.

கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை : -**

.................................... ஆகிய என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் ஒரு வேலையற்ற பட்டதாரி என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனாலும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்திசெய்துள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

என்னால் இங்கு தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

*9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-***

*இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ...................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் அவர் ஒரு வேலையற்ற பட்டதாரி என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.*

-----,
*கையொப்பத்தை உறுதிப்படுத்தும்*
*அலுவலரின் கையொப்பம்*
*(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)*

*உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.*
*பதவி :-----.*
*முகவரி :-----.*
*திகதி :-----.*

*11-180/2*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் சேவையில் 3 வகுப்பில் III தரத்திற்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015

*வடமேல் மாகாண அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு கீழ் காணப்படும் தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. இந்தப் பரீட்சை 2015.12.20 ஆந் திகதி நடைபெறும்.*

*(அ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்*
*(ஆ) கணினி மென்பொருள் தொழில்நுட்பவியலாளர்*

*2. 2.1 **சம்பள திட்டம்**: 3 வகுப்பு தரம் III.-*
*ரூபா 14,425 - 10 × 145 - 11 × 170 - 06 × 240 - 14 × 320 - ரூபா 23,665 ஆகும். (MT - 1 - 2006 A)*

*2.2 **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*2.3 **சேவை ஒப்பந்தம்**.- இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது. இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி தொடக்கம் விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய சம்பளத்திற்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும். இந்த பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் உரியவாறு 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உள்ளாக்கப்படுவர். இன்னும் இப்பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் உயர்வுக்கான படிமுறைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கும், அரசாங்கம் மற்றும் வடமேல் மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற வேறு கட்டளைகளுக்கும் அமைய எல்லா உத்தியோகத்தர்களும் உடன்படுதல் வேண்டும். ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரிவினுள் உள்ள எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு உடன்படுதல் வேண்டும். இடமாற்றங்களுக்கு உடன்படுதல் வேண்டும்.*

*3. (அ) **கல்வித் தகைமை**.- சிங்களம்/தமிழ், கணிதம், ஆங்கில மொழி உட்பட திறமைச் சித்தி ஐந்து (5) உடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு க. பொ. த. (சா. தர) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*மற்றும்*

*க. பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*(ஆ) **தொழிற் தகைமை**.- மூன்றாம் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் கணினி கல்வியறிவு பற்றி கீழ் குறிப்பிடப்படுகின்ற பாடங்கள் அடங்கிய 720 மணித்தியாலத்திற்கு குறையாத பாடநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

*(1) கணினியினை உபயோகித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்பாட்டு அமைப்பின் கீழ் கோவைகள் முகாமைத்துவம்;*
*(2) கணினி சொல் ஒழுங்குபடுத்தல்*

(3) விரிதாள் (spreadsheet) ஒழுங்குபடுத்தலும் உபயோகித்தலும்.
(4) கணினியினை உபயோகித்து சமர்ப்பித்தல்
(5) தகவல் அடித்தள நிர்மாணமும் உபயோகித்தலும்
(6) வலையமைப்பு மற்றும் மின்அஞ்சல் உபயோகிப்பதற்கான திறமை

4. **வேறு தகைமைகள்.**- இப்பதவிக்காக எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள்.-

4.1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

4.2 நல்லொழுக்கமும் தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்;

4.3 வடமேல் மாகாண அதிகாரப் பிரிவினுள் விண்ணப்பப் படிவம் கோரப்படும் கடைசித் திகதிக்கு அண்ணளவாக தொடர்ந்து 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். வதிவினை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரிடத்தில் பெற்றுக்கொண்ட சான்றிதழினை பிரதேச செயலாளரின் மேற் கையொப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.4 தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ளவராயின் அவர் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் திகதிக்கு அண்ணளவாக 5 வருடத்தினுள் எச்சரிக்கை தவிர தண்டனை ஏதும் பெறாதிருத்தலுடன் 5 வருட காலத்தினுள் எல்லா சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுபடி ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டு பாடங்களில் அதிகமான புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரிகளில் முன்னுரிமை அட்டவணைப்படி தொடர் இலக்கப்படி விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு (புள்ளி வழங்காத அடிப்படையில்) உட்படுத்தி ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா வெற்றிடங்களையும் நிரப்புவது அல்லது நிரப்பாதது பற்றிய கடைசித் தீர்மானம் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுக்குரியதாகும்.

6. **பரீட்சை படிமுறை.**- பரீட்சை இரண்டு கேள்விப் பத்திரங்களைக் கொண்டது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழியினை திருத்தியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்து பிழைக்காக புள்ளிகள் குறைக்கப்படும்.

(i) தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்து மூலமான பரீட்சை - 2 மணி நேரம் (100 புள்ளிகள்) ;
(ii) திறனாய்வுத் தேர்வு - 1 மணி நேரம் (100 புள்ளிகள்)

6.1 பாடத்திட்டம் :

(i) **தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்துமூலமான பரீட்சை.**- பரீட்சார்த்திகளின் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய பொது அறிவினை பரிசீலிக்கின்ற கேள்வி. இந்த கேள்விப் பத்திரத்திற்கு உள்ளடங்கும். அதற்கு எழுத்துமூலம் கேள்வி போன்று பல்தேர்வு கேள்விகளும் உள்ளடக்கப்படலாம். தொழிற்பாட்டு தொடர்கள், மென்பொருள், வன்பொருள், சொல்லாக்கம், விரிதாள் (Spreadsheet) தகவல் தொகுப்பு முகாமைத்துவம், வலையமைப்பு மற்றும் இலெக்ரொனிக் தபால் ஆகிய துறைகளில் பரீட்சார்த்திகள் தேர்வுக்கு உட்படுத்தப்படுவர்.

(ii) **திறனாய்வுத் தேர்வு.**- புள்ளிவிபரவியல் இயலுமை, வாதிடல் மூலம் தகவல்களை முன்வைத்தல் மற்றும் பொது அறிவினை பரிசீலிப்பதற்கான கேள்வி, ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துமூலமான பரீட்சை.

**க. வே.**- பதவியினுடைய கடமைக்காக பரீட்சார்த்திகளின் திறனாய்வினை மற்றும் இயலுமையினை பரிசீலிப்பதற்காக இக்கேள்விப் பத்திரம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சை போட்டிப் பரீட்சையான போதும் ஒவ்வொரு பாடங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் நூற்றிற்கு 40 வீதப்புள்ளிகள் பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், பரீட்சையின் மொத்த புள்ளிகளில் நூற்றிற்கு 50 ஆவது பெறல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையினை பூர்த்திப்படுத்தும் வகையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் பதவி வழங்கப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா தொகையினை வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் வருமான தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பில் இடக்கூடியவாறு என்றாலும் நிரந்தரமாக தாம் வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறும் வ. மா. ச. /2 பற்றுச்சீட்டினை விண்ணப்பப் பத்திரத்தில் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு நிதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு தவிர வேறு நிறுவனங்களுக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது நிதிக் கட்டளையினை பொறுப்பேற்கப்படாததுடன், எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளத் திருப்பி செலுத்தப்படமாட்டாது என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

8. **விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறைகள்.**-

8.1 இவ் அறிவித்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 அளவில் (செ. மீ. 21×29) அளவிலான கடதாசியில் இருபக்கத்தினையும் உபயோகித்து விண்ணப்பப்படிவத்தினை ஒழுங்கமைத்தல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத்தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "வடமேல் மாகாண சபை அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் 3 வகுப்பில் III தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2015" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

8.2 தற்போது அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

8.3 குறித்த மாதிரிப் படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, குறித்தவாறு தகவல்களை வழங்காத, பூர்த்தியற்ற மற்றும் காலம் தாமதித்து கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்களை எவ்வித அறிவித்தலும் இன்றி இரத்து செய்யப்படும். இன்னும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி பத்திரத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். உரியவாறு விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்ற தடங்களுக்கு விண்ணப்பதாரியினாலேயே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி ஒன்றினையும் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியினையும் தங்களிடம் வைத்துக்கொள்வது பிரயோசனமானதாகும். விண்ணப்பப்படிவம் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

9. விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதி 2015.12.04 ஆகும்.

10. இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவம் தள்ளுபடி செய்யப்படும். போட்டிப் பரீட்சைக்கு முன்னிற்பதற்காக நுழைவுப் பத்திரத்தினை வழங்குதல் விண்ணப்பதாரி இப்பதவிக்கு உரிய தகைமை பெற்றுள்ளார் என்பதாக என்று கருதலாகாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் மூலப் பிரதியினை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். எல்லா விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய எல்லா தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.

11. விண்ணப்பதாரியின் அடையாளம்.- விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சைக்கு தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் தமது அடையாளத்தினை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களினால் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு**.- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு இயலாது போனால் அவர் பரீட்சைக்கு முன்நிற்பதற்கு தகுதியற்றவர் என்று கருதப்படும்.

12. எந்தவொரு பரீட்சார்த்திக்கும் உரிய நுழைவுப் பத்திரம் பரீட்சைக்கு 7 தினங்களுக்கு முன்பு கிடைக்காது விடின் அது பற்றி செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத்தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பரீட்சையின் பெயர்
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்
(இ) முகவரி
(ஈ) விண்ணப்பப் படிவம் அனுப்பிய முகவரி, பதிவுத் தபால் இலக்கமும் திகதியும்.

13. எந்தவொரு விண்ணப்பதாரியும் தகைமையற்றவர் என்று நியமனம் கிடைப்பதற்கு முன் எச்சந்தர்ப்பத்திலாவது தெரியவந்தால் நியமனம் இரத்துச் செய்யப்படும். நியமனம் கிடைத்த பின்பு அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்கள் சமர்ப்பித்துள்ளமை பற்றி அல்லது உண்மையான தகவல்களை வேண்டும் என்றே மறைத்துள்ளமை பற்றி தெரியவந்தால் பதவியில் இருந்து விலக்கப்படுவார்.

14. விண்ணப்பப்படிவம் கோரும் அறிவித்தலுக்குரிய தகவல்கள் அல்லது அவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு தகவல்கள் பற்றி வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

15. இப்பரீட்சையினை நடாத்துவது அல்லது நடத்தாதது பற்றி அல்லது நடத்தப்பட்ட பின்பு தேர்ந்தெடுப்பது/தேர்ந்தெடுக்காதிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கை பற்றி கடைசித் தீர்மானம் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும். அது போன்று இவ் அறிவித்தலின் சட்டதிட்டங்கள் கூறப்படாத ஏதாவதொரு தகவல் இருப்பின் அது பற்றிய கடைசி தீர்மானமும் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல், 037-2233769

(இந்த அறிவித்தலை அடிப்படையாக கொண்டு பலதரப்பட்ட நிறுவனங்களினால் பொய்யாக ஒழுங்கமைக்கப்படும் அறிவித்தல்கள் தகவல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களுக்கு பொறுப்புக் கூறப்படமாட்டாது)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் சேவையில் 3 வகுப்பில் III தரத்திற்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

(விண்ணப்பிக்கும் பதவி)

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டில் ( ✓ ) இடவும்)

சிங்களம்     தமிழ்     ஆங்கிலம்

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs/Miss :-----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) உதா : SILVA, A. B.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.

1.4 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில பெரிய எழுத்தில்)

1.5 நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில் /தமிழில்)

1.6 அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :-----.

1.7 தொலைபேசி இலக்கம் :-----.

1.8 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

2. 2.1 பால் : ஆண் /பெண்    பெண் - F    ஆண் - M

2.2 திருமணமான/திருமணமாகாதது பற்றி :
(திருமணமாகாத - 1, திருமணமான - 2)

2.3 பிறந்த திகதி :
ஆண்டு    மாதம்    திகதி

2.4 2015.12.04 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள்    மாதங்கள்    நாட்கள்

3. 3.1 2015.12.04 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவு :-----.
ஆண்டு:-----,    மாதம் :-----,    நாட்கள் :-----.

3.2 விண்ணப்பதாரி தற்போது அரச/மாகாண சபை அரச சேவையில் உள்ளவராயின்,

I. சேவை நிலையம் :-----.

II. தற்போது வகிக்கும் பதவி :-----.    சேவை காலம் :-----.

4. கல்வித் தகைமைகள் :-

4.1 க.பொ.த. (சா. தர) பரீட்சை பற்றிய விபரம் :-----.

முதலாம் அமர்வு -
வருடமும் மாதமும் :-----. பரீட்சை சுட்டெண் :-----.

இரண்டாம் அமர்வு -
வருடமும் மாதமும் :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| | பாடங்கள் | பெறப்பட்ட தரம் | | பாடங்கள் | பெறப்பட்ட தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 1 | | |
| 2 | | | 2 | | |
| 3 | | | 3 | | |
| 4 | | | 4 | | |
| 5 | | | 5 | | |
| 6 | | | 6 | | |
| 7 | | | 7 | | |
| 8 | | | 8 | | |
| 9 | | | 9 | | |
| 10 | | | 10 | | |

4.2 க.பொ.த. (உ. தர) பரீட்சைக்கு தோற்றிய வருடம் மற்றும் புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டத்தின் கீழா என்பது பற்றிய விபரம் :-----.

பரீட்சையின் - வருடமும் மாதமும் :-----. பரீட்சைச் சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | | |
| 2 | | | 4 | | |

4.3 தொழில்நுட்ப தகைமை :-----.
(விண்ணப்பப்படிவத்துடன் வேறு எவ்வித சான்றிதழும் சமர்ப்பிக்கலாகாது.)

5. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம் : -
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் :-----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் செலுத்திய தொகை :-----.

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.)

6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

......................... என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் எனக்கு தெரிந்தளவில் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ......................... ஆம் இலக்க ...................... ஆந் திகதியுடைய பற்றுச்சீட்டு இங்கு இணைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும், இந்த பரீட்சை பற்றிய நிபந்தனைகளின் படி நான் தகுதியற்றவர் என்று பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் தெரியவந்தால் எனது பரீட்சார்த்த தகைமையை இரத்து செய்வதற்கு எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாக அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

7. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்:**

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ...................................................................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட வகையில் தெரிந்தவர் என்றும் அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரின் கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

(இச்சான்றிதழ் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியினை வகிக்கும் அலுவலர் ஒருவர் அல்லது 240,360.00 ரூபாவிற்கு மேற்பட்ட வருட சம்பளத்தினை பெறும் அரச நிரந்தர/மாகாண அரச சேவை அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

திரு./திருமதி/செல்வி ..................................................தற்போது .............................................. அமைச்சில்/திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. ஆக நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ளார் என்று உறுதிப்படுத்துகின்றேன். இப்பரீட்சையின் பெறுபேற்றின்படி நியமனத்திற்காக அவரை தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையினை இடவும்)

திகதி :-----.

10-66

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2015 |
| | | வெள்ளி | 13.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2015 |
| | | வெள்ளி | 20.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2015 |
| | | வெள்ளி | 27.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2015 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 04.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.11.2015 |
| | | வெள்ளி | 11.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.11.2015 |
| | | வெள்ளி | 18.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.12.2015 |
| | | புதன் | 23.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.12.2015 |

**அட்டவணை - 2016**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 01.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.12.2015 |
| | | வெள்ளி | 08.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2015 |
| | | வியாழன் | 14.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.01.2016 |
| | | வெள்ளி | 22.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.01.2016 |
| | | வெள்ளி | 29.01.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.01.2016 |

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.